RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சித்தர் பாடல்களில் சைவ சித்தாந்தக் கூறுகள்

**இரா. இந்திரா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, திரு ஆ கோவிந்தசாமி அரசு கலைக்கல்லூரி, திண்டிவனம்-604307, இந்தியா

# A Study of Saiva Siddhanta Concepts in Siddhar Songs

**R. Indira** [a, *]

[a] Department of Tamil, Thiru. A. Govindasamy Government Arts College, Tindivanam-604307, India

* Corresponding Author:
indiramurugaiyan1@gmail.com

**ABSTRACT**

The Siddhars were spiritual thinkers who transcended caste and religious boundaries and developed distinctive paths of spiritual and ethical thought based on a spirit of social harmony. Their literary corpus encompasses a wide range of subjects, including philosophy, ways of life, alchemy, medicine, yoga, and spiritual wisdom, through which they articulated profound reflections on human existence and society. Although Siddhar songs incorporate ideas drawn from several Indian philosophical traditions, the Siddhars did not confine themselves to any single institutional religious framework. Nevertheless, numerous concepts associated with Saiva Siddhanta can be identified within their songs, revealing significant philosophical affinities between Siddhar thought and Saiva Siddhanta. This study examines the Saiva Siddhanta elements present in Siddhar songs, focusing particularly on the concepts of religious universality, Pati (the Supreme Lord), Pasu (the individual soul), Pāśa (the bonds that bind the soul), the three impurities (Mummalam), the four spiritual paths (Nālvagai Mārkam), and the state of Tādātmya (essential identification or inseparable union). Through a philosophical and textual analysis of selected Siddhar songs, the study investigates the ways in which these concepts are articulated and how they relate to the fundamental principles of Saiva Siddhanta. The study finds that Siddhar thought and Saiva Siddhanta, despite differences in their modes of expression and religious orientation, exhibit substantial philosophical convergence. Both traditions emphasize the unity and omnipresence of the Divine and affirm that God is one, all-pervading, and omnipotent. The presence of Saiva Siddhanta concepts in Siddhar songs therefore demonstrates a significant philosophical relationship between Siddhar spirituality and Saiva thought, while also highlighting the broader inclusive and universal dimensions of Tamil spiritual philosophy.

**Keywords:** Saiva Siddhanta, Siddhar spirituality, Saiva thought, Spiritual thinkers

## முன்னுரை

மனித மனதை செம்மைபடுத்திப் பண்பட்ட வாழ்வியலை வடிவமைக்கத் தோன்றியவையே சமயங்கள். இச்சமயங்கள், வழிபடும் முறைகளாலும் வழிபடும் பொருள்களாலும் வெவ்வேறு பெயர்களைக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் சிவனை வழிபடு கடவுளாகக் கொண்டு விளங்கும் சைவசமயம், மிக நேர்த்தியாக வரையறுக்கப்பட்ட முற்றும் முடிந்த கருத்து முடிபாக சிவநெறி என்னும் 'சைவசித்தாந்தம்' விளக்குகிறது. இச்சைவ நெறி, சித்தர் நெறியை அடிப்படையாகக் கொண்டே இடைக்காலத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தால் காலத்திற்கு ஏற்றார்போல் சைவசித்தாந்தமாக தோற்றம் கண்டிருக்கிறது என்கிறார் டாக்டர் ரா. மாணிக்கவாசகம் அவர்கள்.1 இதன்படி, சித்தர் பாடல்களையும் சைவசித்தாந்தத்தையும் ஒப்புநோக்கி 'சித்தர் பாடல்களில் சைவசித்தாந்தக் கூறுகள்' என்ற தலைப்பில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது.

## சித்தர் தத்துவமும் சைவ சித்தாந்தமும்

சைவ சித்தாந்தம் என்பது தமிழர் மரபில் தோன்றிய சைவ நெறியாகும். இதை, "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" என்கிறார் உமாபதி சிவனார். (சிவப்பிரகாசம்) "சைவ சித்தாந்தம் இந்தியச் சிந்தனை, உணர்வு ஆகியவற்றின் சிகரம்" என்று சிறப்பித்துக் கூறுகிறார் கௌடி என்பவர். முதன் முறையாக சைவ சித்தாந்தத்தின் அடிப்படைப் பொருளான பதி, பசு என்னும் தத்துவம், பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படையில், முருகன் அருள் பெற்ற ஒருவன் பெற விழையும் மற்றொருவருக்கு ஆற்றுப்படுத்தும் நிலையில் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. உண்மையான சைவ சித்தாந்திகளின் இயல்பைக் கூறவந்த திருமூலர்,

"கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்

முற்பத ஞான முறைமுறை நண்ணியே

சொற்பத மேவித் துரிசற்று மேலான

தற்பரம் கண்டுளோர் சைவசித் தாந்தரே"[2]

என்ற பாடலில் முதன்முதலாக சைவசித்தாந்தம் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். சைவசித்தாந்தம் என்னும் சொல்லோடு சமயத்தையும் தத்துவத்தையும் இணைத்து கூறும் முதல் நூலாக திருமந்திரம், விளங்குவதாக டாக்டர் ரா. மாணிக்கவாசகம்[3] குறிப்பிடுகின்றார். "பின்வந்த பக்தி இயக்கம் காரணமாகத் தோன்றிய சமயம் தொடர்பான நம்பிக்கை, வழிபாட்டு முறை, கற்பனை கலந்த கதைகள் அனைத்தும் சித்தர்கள் கண்ட சித்தாந்தத்தை உருமாற்றம் செய்தன. சாத்திரங்கள் பதினான்கின் தோற்றம் புதிய சைவசித்தாந்தத்துக்கு வழி கோலியது. காலப்போக்கில் சித்தர்களின் கொள்கையினின்று வேறுபடுத்தப்பட்டது; புதிய விளக்கங்கள் தரப்பெற்றன" என்கிறார் கே. ஆறுமுக நாவலர்[4], இக்கருத்தை நோக்குங்கால் சித்தர் நெறியே பின்னாளில் சைவசித்தாந்தமாக உருபெற்று சித்தர் நெறி சித்தாந்தத்திலும் சித்தாந்தம் சித்தர் பாடல்களிலும் பரவியிருப்பதைக் காண முடிகிறது.

## சமயப்பொதுமை

சைவ சித்தாந்தம் பிற சமயக் கருத்துகளை ஏற்பதுமில்லை, வெறுத்து ஒதுக்குவதுமில்லை. பிற சமயத்தார் உண்மை நிலை அறிந்து பின் சைவ நெறியைப் பின்பற்றுவர் என்பது இவர்களுடைய நம்பிக்கை, ஏனென்றால் இது அனுபவப் பூர்வமாக ஆய்ந்து அனுபவித்து தொகுக்கப்பட்ட நெறியாகும். அதனால் பொதுமைத் தன்மை கொண்டதாகக் கருதப்படுகிறது. சித்தர் பாடல்களும் சாதி, சமய வேறுபாடுகள் பாராது பரம்பொருள் ஒன்றே என்னும் கொள்கை உடையதாக இருக்கிறது. அணிகலன்கள் வேறு வேறாக இருந்தாலும் செய்த பொருள் தங்கம் ஒன்றே. அதுபோல இறை ஒன்றே என்பதை,

"தங்கமொன்று ரூபம்வேறு தன்மையான வாறுபோல்

செங்கண்மாலும் ஈசனும் சிறந்திருந்த தெம்முளே"[5]

என சமய பொதுமையை வலியுறுத்துகின்றார் சிவவாக்கியர்.

## முப்பொருள்

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் பற்றிச் சிறப்பாக பேசுகிறது. இவை மூன்றும் என்றுமுள பொருள்கள். இவற்றுக்குத் தோற்றமும் இல்லை; முடிவும் இல்லை என்கிறது. இதையே திருமூலரும்,

"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்

பதியினைப் போல் பசுபாசம் அநாதி"[6]

என்கிறார். அதாவது பதி பசு பாசம் மூன்றும் தனித்தனிப் பொருள்களே. இவைகளில் எந்தப் பொருளும் எந்தப் பொருளின் காரியமும் அன்று. மேலும் இக்கருத்தையே மெய்கண்டாரும்,

"அவனே தானே யாகிய அந்நெறி

ஏக னாகி இறை பணி நிற்க

மலமாயை தன்னொடு வல்வினை இன்றே"

என்று தமது சிவஞான போதம் பத்தாம் சூத்திரத்தில் உணர்த்துகின்றார்.

பதி - பசு தொடர்பு:

ஆன்மா எண்ணற்றவை, நித்தியமானவை, அது தனித்து நிற்பதில்லை. எதைச் சாருகிறதோ அதுவாகிறது. முதலில் அது மும்மலங்களால் தளைப்பட்டு பின் இறை அருளைப் பற்றி வீடுபேறு அடைகிறது என்பதை சித்தர் நெறியும் சித்தாந்தமும் எடுத்துரைப்பதைப் பரவலாகக் காணமுடிகிறது.

## மும்மலம்

பசுவாகிய உயிர்களைப் பிணித்துள்ளவை மும்மலங்கள். இதனை ஆணவம், கன்மம், மாயை என்பர். இதில் ஆணவம் என்பது, நெல்லில் உமியும் செம்பில் களிம்பும் இருப்பது போல உயிர் என்று தோன்றியதோ அன்றே உயிருடன் இணைந்துவிடும். இதனை,

"நெல்லின் முளை தவிடுமிபோல் அநாதியாக

நிறுத்திடுவர் இதுசைவ நிழ்த்துமாறே"[7] என்று உமாபதி சிவனாரும்,

"ஆணவம் மாயையும் கன்மமும் ஆம்மலம்

காணும் முளைக்குத் தவடுமி ஆன்மாவும்

தாணுவை ஒவ்வாமல் தண்டுலமாய் நிற்கும்

பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே"[8] என்று திருமூலரும் குறிப்பிடுவதிலிருந்து கண்டு உணரலாம்.. மேலும் மும்மலங்களை நீக்குதல் கடினம் என்பதை,

"நாறுமீனப் பலதரம் நல்ல தண்ணீரால்

நாளுங் கழுவினுமதன் நாற்றம் போமோ

கூறுமுடல் பலநதியாடிக் கொண்டதால்

கொண்டமலம் நீங்கா தென்று ஆடுபாம்பே"[9]-எனப் பாம்பாட்டிச் சித்தர் விளக்குகின்றார். மேலும் கன்ம மலம் பெற்ற உடலின் தன்மையை,

"காய்ந்தமர மதுமிக்க கல்லடி படும்

கன்மவினை கொண்ட காயம் கண்டனைப் பெறும்"[10] எனப் பாம்பாட்டிச் சித்தர் விளக்குகின்றார். இவ்வாறு மலத்தின் தன்மையினை உணர்ந்த சித்தர்கள் அதிலிருந்து மீளும் வழியினையும் அறிந்திருந்தார்கள்.

## நால்வகை மார்க்கம்

உயிரானது இறைவன் திருவடியை அடைந்து முக்தி இன்பம் பெறுவதை சைவசித்தாந்தம் நால்வகை மார்க்கம் என்று குறிப்பிடுகிறது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதாம். இவை முறையே இறையுலகில் இருக்கும் பேறு, இறைவன் அருகில் இருக்கும் பேறு, இறைவனையொத்த நிலையினை அடையும் பேறு, இறைவனுடன் கலக்கும் பேறு என வரையறுக்கப்படுகிறது. சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று மார்க்கங்களை முதல் நிலையாகக் கொண்டு ஞான மார்க்கத்தினை அடைய வேண்டும். இந்நிலையைச் சாயுச்சிய நிலை என்பர். மாணிக்கவாசகர் இவ்வழி நின்றவர். இந்நிலையை பதியறிவு என்பர். பதியறிவு என்பது இறைநிலையே என்று திருமூலர்,

"ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை

ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று

ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்

ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே"[11]

என்ற பாடலடிகளில் எடுத்துரைக்கிறார். யோக நிலையில் நின்று இறைநிலையை அடையும் சாயுச்சிய நிலையினைச் சித்தர் பாடல்களில் பெரிதும் காண முடிகிறது.

"இருக்கலாம் எந்தெந்த யுகங்களுக்கும்

ஏகாந்தமான தொருபரமந் தன்னில்'[12]

எனக் காகபுசுண்டரும், இறைவனது அருகில் இருக்கும் பேற்றினை,

"வீறுபெருங் கடவுளை எங்களுடனே

விளையாடச் செய்குவோமென் றாடுபாம்பே"13 என இறைவன் அருகில் இருப்பதோடு அவனோடு விளையாடும் பேற்றினைப் பெற்றவர்கள் சித்தர்கள் எனப் பாம்பாட்டிச் சித்தரும் எடுத்துரைக்கின்றனர். இறைவனை ஒத்த நிலையைப் பெறும் சாரூப நிலையை,

"வேதன் செய்த சிருட்டிகள்போல் வேறுசெய்குவோம்

வேதனையு மெங்கள் கீழே மேவச் செய்குவோம்

நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம்"14. எனக் குறிக்கும் சித்தர்கள், இறைவனுடன் கலக்கும் பேற்றினை,

"ஒன்றோடொன்று கூடில் அகப்பேய்

ஒன்றுங் கெடுங்கோனே

நின்ற பரமசிவமும் அகப்பேய்

நில்லாது கண்டாயே"15-எனக் குறிப்பிடுகின்றார். இதனால் அகத்திலே உறையும் இறைவனை உணர்ந்து அவனோடு ஒன்றும் நெறியை அறிந்தவர்கள் சித்தர்கள் என்னும் உண்மை புலப்படுகிறது.

## தாதான்மிய நிலை

உயிருடன் ஒன்றாக நிற்கும் இறைவன் தன்னிலையில் இரண்டாக இருக்கின்றான். இறைவனும் இறையாற்றலும் குணி, குணம் என இருவகையாகப் பகுப்பர். பிரிக்கமுடியாத ஒரு பொருள் இருதன்மைப்பட்டு நிற்பதே தாதான்மியம் எனப்படுகிறது. இறைவனையும் இறையாற்றலையும் சிவசக்தியாகச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. "எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள்" என்கின்றது சிவஞானசித்தியார். சித்தர் பாடல்களில் வாலை, சக்தி, மனோன்மணி என்னும் பெயர்களில் இறை ஆற்றல் அழைக்கப்பெறுகிறது. வாலையாகிய சக்தியையும் பரம்பொருளாகிய சிவனையும் தம்முள்ளே குணமும் குணியுமாகக் கண்டவர்கள் சித்தர்கள்.

## முடிவுரை

இக்கட்டுரையில் முப்பொருள், ஐந்து தொழில், சமயப்பொதுமை, தாதான்மிய நிலை என ஆய்வுக் கலங்களை நோக்குங்கால் சித்தர் பாடல்களில் சைவ சித்தாந்தக் கூறுகள் விரவி இருப்பதைக் காணமுடிகிறது. பல கருத்துகளில் சித்தர் நெறியும் சித்தாந்தக் கருத்தும் ஒன்றுபட்டு இருந்தாலும் இறைநிலை அடையும் தன்மையில் மட்டும் சித்தர் நெறி சாயுச்சிய நிலையில் இறையுடன் கலந்து இறைவினை ஆற்றலாம் என்றும் சித்தாந்தமோ சாயுச்சிய நிலையில் இறையுடன் கலந்து இறை அடிமையாகி பேரானந்தம் கொள்ளலாம் என வேறுபடுகின்றன என்பதையும் அறிய முடிகிறது.

## References

உமாபதி சிவம், சிவப்பிரகாசம்

கே. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், பக் - 46

சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், தமிழ்ப்பிரியன், பக் - 275

திருமூலர், திருமந்திரம்

திருமூலர், திருமந்திரம்

பெரிய ஞானக்கோவை

ரா. மாணிக்கவாசகம், சிவன் - சித்தர்கள் - சித்தாந்தம்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License